**கவனிக்க.-** 2006.06.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1450 - 2006 ජූනි 16 වැනි සිකුරාදා - 2006.06.16

1450 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 370 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 374 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 376 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 387 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, மே 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 23 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூன் 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2006 இன் இல. 122*

*இலக்கம் : டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2205.*

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்,*

**இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்.**

**இளைப்பாறுதல்**

*பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*உ/ 50630 மேஜர் ஜெனரால் ஹேரத் முதியன்சேலாகே நிமல் கிருஷ்ணரத்ன, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ.*

**இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்**

*பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல் மாண்புமிகு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*உ/ 50630 மேஜர் ஜெனரால் ஹேரத் முதியன்சேலாகே நிமல் கிருஷ்ணரத்ன, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ*
*ஆர்டப்பீ, ஆர்.எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,*
*சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2006, பெப்புருவரி 20.*

*6-401*

---

*2006 இன் இல. 123*

*இல. : டீஆர்எப்/21/ ஆர்ஈசீரீ/2219.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

*இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்*

**இளைப்பாறுதல்**

*பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005.11.29 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் பலப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*உ/50570 மேஜர் ஜெனரால் மாபிடியகே தொன் சுசிலி சந்திரபால ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ.*

**இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்**

*பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005.11.29 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*உ/50570 மேஜர் ஜெனரால் மாபிடியகே தொன் சுசிலி சந்திரபால ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, என்டீயூ, பீஎஸ்சீ.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,*
*சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2006.02.18.*

*6-406*

---

*2006 இன் இல. 124*

*இலக்கம் : டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2243.*

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்,*

**இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

**இளைப்பாறுதல்**

*பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*உ/50677 மேஜர் ஜெனரால் வதிகே பசில் பீரிஸ் யூஎஸ்பீ,*

**இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்**

*பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் (பொது)*

உபசேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/50677 மேஜர் ஜெனரால் வதிகே பசில் பீரிஸ் யூஎஸ்பீ,

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ
ஆர்டப்பீ, ஆர்.எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்களின்பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, சனவரி 17.

6-400

---

2006 இன் இல. 125

இல. : டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/2248.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல் இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2006.01.30 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/50662 மேஜர் ஜெனரால் காமினி ஹெட்டிஆரச்சி டப்டப்பீ, ஆர்டப்பீ, யூஎஸ்பீ, பீஎஸ்சீ.

### இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2006.01.30 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/50662 மேஜர் ஜெனரால் காமினி ஹெட்டிஆரச்சி டப்டப்பீ ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, பீஎஸ்சீ.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.01.17.

6-407

---

2006 இன் இல. 126

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2236.

## இலங்கை - தரைப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல், பதவியுயர்த்துதல் இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்

### பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து கர்னல் பதவியின் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

பி/61640 லெப்டினன்ட் கர்னல் (தற்காலிக கர்னல்) களுஅப்பு கன்கானம்கே செனத் தேவபிரிய கருணாரத்ன.

### பதவி உயர்த்துதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து பிரிகேடியர் பதவிக்கு பதவியுயர்த்துதல் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61640 கர்னல் களுஅப்பு கன்கானம்கே செனத் தேவபிரிய கருணாரத்ன.

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61640 பிரிகேடியர் களுஅப்பு கன்கானம்கே செனத் தேவபிரிய கருணாரத்ன.

*இலங்கை தரைப்படையில் நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்*

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61640 பிரிகேடியர் களுஅப்பு கன்கானம்கே செனத் தேவபிரிய கருணாரத்ன.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.01.13.

6-404

2006 இன் இல. 127

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2250.

**இலங்கை – தரைப்படை –நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்,

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்னல் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக் கப்பட்டுள்ளது :-

பி/60577 மேஜர் (தற்காலிக லெப்டினன்ட் கர்னல்) சுபாஷ் ஜனக்க நலின கீர்த்தி ரிடிகஹபல ஆர்எஸ்பீ பீஎஸ்கீ கரே.

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப்பலப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/60577 லெப்டினன்ட் கர்னல் சுபாஷ் ஜனக்க நலின கீர்த்தி ரிடிகஹபல ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ, கரெ.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.01.20.

6-405

---

2006 இன் இல. 128

இல. : டீ /ஏஎவ்/8.

**இலங்கை – வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி உயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவருடைய பெயரின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து தற்காலிக எயார் கொமதோர் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

குழுக் கப்ரின் திலக் லொயிட் விஜேரத்ன திசாநாயக்க, (01287)– உபகரணங்கள் 2006.01.01 .

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.03.23.

6-402

---

2006 இன் இல. 129

இல. : டீஏஎவ்/528.

**இலங்கை – வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

2006 யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் பெறுவார் :-

விங் கொமாண்டர் தொன் அசேல தாம்புரே வித்தானகே (01549) நிர்வாக

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.03.09.

6-408

---

2006 இன் இல. 130

இல. : டீஏஎவ்/529.

**இலங்கை – வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

2006 ஒகத்து மாதம் 30 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் பெறுவார் :-

விங் கொமாண்டர் லலித் சிரிலால் அபேசேக்கர (01441), நிர்வாக/ரெஜி.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.03.15.

6-410

*2006 இன் இல. 131*

இலக்கம் : டீஆர்எவ்/527.

**இலங்கை - நிரந்தர வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்,*

2006, யூலை மாதம் 31 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரினது இலங்கை நிரந்தர வான் படை சேவையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

| பதவி | முழுப்பெயரும் சேவை இலக்கமும் | கிளை |
|---|---|---|
| ஸ்கொட்ரன் லீடர் | லேகா இரேஷா பினானி அமரதுங்க (ஓடப்/01009) | நிர்வாக |

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ
ஆர்டப்பீ, ஆர்.எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்களின்பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மார்சு 20.

6-403

---

*2006 இன் இல. 132*

இல. : டீஏஎவ்/537.

**இலங்கை - வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்*

2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தருடைய அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

ஸ்கொட்ரன் லீடர் கொட்டகெதர லியனகே ஆஸ்லி தீபால் சுஜீவ பெரேரா (01994) - வைத்திய.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.05.09.

6-412

---

*2006 இன் இல. 133*

இல. : டீஏஎவ்/பீ/65.

**இலங்கை - தொண்டர் வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்*

2006 மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் இலங்கை தொண்டர் வான் படை சேவையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

| பதவி | முழுப்பெயரும் சேவை இலக்கமும் | கிளை |
|---|---|---|
| அதிகார வகுப்பு லெப்டினன்ட் | சுபுன சந்தகான் விதானகமச்சிகே (ஸ்/0459) | தொழில் பொறியியலாளர். |

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.03.20.

6-409

---

*2006 இன் இல. 134*

இல. : டீஏஎவ்/பீ/66.

**இலங்கை - தொண்டர் வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்*

2006 மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் இலங்கை தொண்டர் வான் படையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

| பதவி | முழுப்பெயரும் சேவை இலக்கமும் | கிளை |
|---|---|---|
| அதிகார வகுப்பு லெப்டினன்ட் | திவதலகே நிரோஷ்தரங்க சில்வா (ஸ்/0489) | தொழில் பொறியியலாளர். |

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டம், சமாதானம் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.03.20.

6-411

# அரசாங்க அறிவித்தல்கள்

## திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்வதற்கான தேவாலயம் பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பதிவாளர் நாயகம் லபுகல கருணாநாயககே ரத்னசிறி ஆகிய நான் பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டுத் தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்யும் நோக்கங்களுக்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

| இல. | பதிவு செய்யப் படும் திகதி | விபரம் | இடம் | மதகுரு அல்லது சொந்தக்காரர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் | கட்டிடம் எந்த மதத்திற்காகப் பதிவு செய்யப்படுகிறதோ அந்த மதம் |
|---|---|---|---|---|---|
| 1396 | 2006.05.08 | புனித செபஸ்தியார் தேவாலயம் | ஹினுவில | வண. ஆயர் ரேமன் பீரிஸ் | றோமன் கத்தோலிக்கம் |

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு.
2006, மே 19.

6-371

---

## திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்வதற்கான தேவாலயம் பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பதிவாளர் நாயகம் லபுகல கருணாநாயககே ரத்னசிறி ஆகிய நான் பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டுத் தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்யும் நோக்கங்களுக்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

| இல. | பதிவு செய்யப் படும் திகதி | விபரம் | இடம் | மதகுரு அல்லது சொந்தக்காரர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் | கட்டிடம் எந்த மதத்திற்காகப் பதிவு செய்யப்படுகிறதோ அந்த மதம் |
|---|---|---|---|---|---|
| 1395 | 2006.04.27 | மேல் அறை ஆலயம் | வத்தளை | பிதா.துஷாந்த லக்ஷ்மன் ரொட்றிகோ | கிறிஸ்தவம் |

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு.
2006, மே 09.

6-372

---

## கண்டி மாவட்டத்தின் மேததும்பர பிரதேச செயலகப் பிரிவின் பகுருகொல்ல கிராம அலுவலர் பிரிவின் பெயரை ரம்புக் வெல்ல கிழக்கு எனத் திருத்துதல்

கண்டி நிர்வாக மாவட்டத்தின் மேததும்பர பிரதேச செயலகப் பிரிவின் இல. 769 பகுருகொல்ல கிராம அலுவலர் பிரிவின் பெயர் 2006.05.26 ஆந் திகதி தொடக்கம் இல. 769 ரம்புக்வெல்ல கிழக்கு எனத் திருத்தப்படுகிறது என்பது பொதுமக்கள் அறிந்து கொள்ளலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. பெயர் திருத்தப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவிற்கு உரிய கிராமங்களின் பெயர்கள் ஊர்களும் அட்டவணை இல. 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. அதன்படி ரம்புக்வெல்ல கிராம அலுவலர் பிரிவிற்கு உரிய நீதிவான் நீதிமன்றம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு பிரிவு, உள்ளூராட்சி நிறுவனங்கள் தேர்தல் பிரதேசம் மற்றும் பிரிவு எல்லைகள் அட்டவணை இல. 02இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

பீ. ஜீ. கருணாரத்ன,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

**அட்டவணை - இல. 01**

**கிராம அலுவலர் பிரிவுகளை மீளமைத்தல்**

| மாவட்டம் | பிரதேச செயலகம் பிரிவு | தற்போது இருக்கின்ற பிரிவின் பெயரும் அதற்குரிய கிராமங்களும் வளவுகளும் | மீளமைப்பின் பின் பிரிவும் அதற்குரிய கிராமங்களும் வளவுகளும் |
|---|---|---|---|
| கண்டி | மெததும்பர | பகுருகொல்ல பிரிவு உரிய ஊர்களும் வளவுகளும்<br>1. எக்கஸஸ்<br>2. பகுர<br>3. சியம்பலாகஸ்தென்ன | ரம்புக்வெல்ல கிழக்கு உரிய ஊர்களும் வளவுகளும்<br>1. ரம்புக்வெல்ல<br>2. எக்கஸஸ்<br>3. பகுருகொல்ல<br>4. சியம்பலாகஸ்தென்ன. |

**அட்டவணை - இல. 02**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | பிரிவின் பெயரும் இலக்கமும் | நீதிவான் நீதிமன்றம் பொலிஸ் | பிறப்பு இறப்பு விவாகப் பதிவுப் பிரிவு | உள்ளூராட்சி நிறுவனம் | தேர்தல் பிரதேசம் | பிரிவின் எல்லைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| கண்டி | மெததும்பர | பகுருகொல்ல 769 | தெல்தெனிய தெல்தெனிய | பலிஸ்பந்துவ கிழக்கு | மெததும்பற பிரதேச சபை | 1.இ தெல்தெனிய | வடக்கு ரஸ்முல்ல பிரிவும் உடவெல பிரிவும்<br>தெற்கு மீகஹமடித்த பிரிவும் விக்டோரியா நீர்தேக்கமும்<br>கிழக்கு மீகஹமடித்த பிரிவும் அநுருத்த ரத்வத்த வீதியும்<br>மேற்கு ரம்புக்வெல்ல பிரிவும் விக்டோரியா நீர்தேக்கமும் |

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### *2002, திசெம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு*

| முன்னைய ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|
| | **1. வருமானம்** | | | | |
| 231,800,000.00 | 01. | அரசாங்க மானியம் (அ) | மீண்டுவரும் | 228,900,000.00 | |
| 9,000,000,00 | | | ஆணைக்குழு | 18,006,000.00 | |
| 1,300,000.00 | | | ஜெல்ட் | 1,130,000.00 | |
| | | | பிணைக் கடைப்பாடு | 2,000,000.00 | 250,036,000.00 |
| 35,335,300.00 | | (ஆ) | கல்வி உதவிப் பணம் | | 36,406,040.00 |
| | | (இ) | மகாபொல புலமைப்பரிசில் | | |
| 4,117,750.00 | | | (I) திறைசேரிக் கூறு | | 7,855,960.00 |
| 10,393,950.00 | | | (II) நம்பிக்கை நிதியம் கூறு | | 23,514,650.00 |
| | | (ஈ) | அறக்கொடை புலமைப் பரிசில் | | |
| | | | (I) திறைசேரிக் கூறு | | 14,500.00 |
| 5,626.50 | 02. | முதலீடுகளிலிருந்து வட்டி | | | 6,723.00 |
| 1,234,164.96 | 03. | கடன்களிலிருந்து வட்டி | | | 1,151,238.10 |
| 409,171.80 | 04. | ஆதனங்களிலிருந்து வாடகை | | | 441,905.00 |
| 91,017.00 | 05 | பழைய இருப்புப் பொருள் விற்பனை | | | 24,530.00 |
| 25,323.50 | 06. | உற்பத்திப் பொருட்களின் விற்பனை | | | 36,760.00 |
| 2,220,898.26 | 07. | நானாவிதப் பெறுகைகள் | | | 1,753,494.76 |
| | 08. | பதிவுக் கட்டணங்கள் | | 596,650.00 | |
| 602,610.00 | | | பட்டதாரி மாணவர் | 128,525.00 | 725,175.00 |
| 111,300.00 | | | பட்டபின் மாணவர் | | 909,925.00 |
| 713,125.00 | 09. | போதனைக் கட்டணங்கள்-பட்டப்பின் மாணவர் | | | |
| | 10. | தேர்வுக் கட்டணங்கள் | | | |
| 116,775.00 | | | பட்டதாரி மாணவர் | 190,050.00 | |
| 60,665.00 | | | பட்டபின் மாணவர் | 66,000.00 | 256,050.00 |
| 21,538.00 | 11. | பிரசுரங்களின் விற்பனை | | | 60,611.75 |
| 6,393.00 | 12. | நூலகக் குற்றப்பணம் | | | 9,622.00 |
| 360,600.00 | 13. | மருத்துவக் கட்டணங்கள் | | | 367,725.00 |
| 196,073.53 | 14. | பெறப்பட்ட கழிவுகள் | | | 85,406.57. |
| 136,358.53 | 15. | இதர செயற்பாடுகளிலிருந்து வருமானம் | | | 291,031.37 |
| 192,600.00 | 16. | புறநிலைப் படிப்புக்கள் அலகு | | | 126,640.00 |
| 13,225.00 | 17. | தொழிலாளர் கல்வி | | | 4,600.00 |
| 1,223,419.06 | 18. | வெளிநிலைத் தேர்வு | பெறுகைகள் | 1,830,229.50 | |
| | | | கொடுப்பனவுகள் | 1,408,850.61 | 421,378.89 |
| 94,300.00 | 19. | அச்சிடல் அலகு | பெறுகைகள் | 273,400.00 | |
| | | | கொடுப்பனவுகள் | 318,237.25 | (44,837.25) |
| 299,782,184.14 | | **மொத்த வருமானம்** | | | 324,455,129.19 |
| | 11. | கழி. செலவினங்கள் | | | |
| 105,286,572.25 | 01. | பொது நிர்வாகமும் பதவியணிச் சேவைகளும் | | 41,353,800.88 | |
| | | | (i) தேய்மானம் | 64,451,418.04 | |
| | | | (ii) பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 2,176,999.77 | 107,982,218.69 |
| 177,579,411.68 | 02. | கல்விச் சேவைகள் | | | 195,402,875.71 |
| 56,226,805.24 | 03. | நலச் சேவைகள் | | | 73,235,729.47 |
| 5,941,059.85 | 04. | காணிகள், கட்டடங்களின் பராமரிப்பு | | | 6,809.451.82 |
| | 05. | ஆராய்ச்சியும் பிரசுரங்களும் | | | |
| | 06. | பட்டப்பின் படிப்புகள் | | | 1,910,357.50 |

| | | | |
|---|---|---|---|
| 1,439,705.42 | 07. | விரிவாக்க நடவடிக்கைகள் | 1,476,666.39 |
| 1,555,920.60 | 08. | துணை நடவடிக்கைகள் | 12,214,167.00 |
| 10,946,367.48 | 09. | நூலக சேவைகள் | 362,251.00 |
| | 10. | ஜெல்ற் நிகழ்ச்சித்திட்டம் | |
| 358,975,842.52 | | **மொத்தச் செலவினங்கள்** | 399,393,717.58 |
| (59,193,658.38) | | ஆண்டுக்கான செலவினம்/வருமான மிகை | (74,938,588.39) |

**வருமான, செலவின பங்கீட்டுக் கணக்கு**

| முன்னைய ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1. **வருமானம்:** | | | | |
| (59,192,658.38) | செலவின/வருமான மிகை (குறை) | | | | (74,938,588.39) |
| (254,544,735.19) | சென்ற ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மீதி | | | (367,561,538.61) | |
| (52,170,749.98) | கூட்டு : திறைசேரி வைப்பு கணக்கிலிருந்து மாற்று | | | | |
| | | | | (367,561,538.61) | |
| 111,163.89 | முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் | | | | |
| | | பெறுகைகள் | 2,914,614.65 | | |
| | | கொடுப்பனவுகள் | 185,060.50 | 2,729,554.15 | (364,831,984.46) |
| (365,796,979.66) | பகிரவேண்டிய தொகை | | | | (439,770,572.85) |
| 1,300,000.00 | மாற்றப்பட்டது : ஆங்கில மொழி கற்பித்தல் நிலையம் | | | 767,749.00 | |
| 1,223,419.06 | வெளிநிலைத் தேர்வுகள் | | | 421,378.89 | 1,189,127.89 |
| 241,139.89 | பதிவழித்தலும் இதர சீராக்கல்களும் | | | | 199,410.78 |
| (368,561,538.61) | | | | | (441,159,111.52) |
| | மீதி முன் கொண்டு செல்லப்பட்டது/ஐந்தொகை | | | | |

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

கையொப்பமிட்டது:
பேராசிரியர் சு. மோகனதாஸ்,
கணக்கீட்டு அலுவலர்,
துணைவேந்தர்.

கையொப்பமிட்டது:
வெ. காந்தமூர்த்தி,
நிதியாளருக்காக.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**2002, திசெம்பர் 31 ஆந் திகதியில் ஐந்தொகை**

| முன்னைய ஆண்டின் இறுதியில் மீதி | | | | | |
|---|---|---|---|---|---|
| | 01. **மூலதனம்:** | | | | |
| 797,747,057.66 | (அ) செலவிடப்பட்ட மூலதன நன்கொடை | | | 854,960,236.26 | |
| 1,288,250.73 | (ஆ) செலவிடப்படாத மூலதன நன்கொடை | | | 1,575,072.13 | |
| 17,807,089.46 | (இ) வருமானம், கொடை பொதுக் காப்பொதுக்கத்திலிருந்து மூலதன செலவிற்கு உதவுதொகை | | | 18,651,089.46 | |
| 16,843,764.54 | (ஈ) இதர நிறுவனங்களிலிருந்து பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களிற்கு உதவுதொகை | | | 21.093,764.54 | |
| 398,960.00 | (உ) கணனி அபிவிருத்திக்கு செலவிடப்பட்ட ஒதுக்கம் | | | 398,960.00 | 896,679,122.39 |
| 834,085,122.39 | | | | | |
| | 02. **ஒதுக்கங்கள்:** | | | | |
| (368,561,538.61) | (அ) பொது ஒதுக்கம் | | | | (441,159,111.52) |
| | (ஆ) பொது ஒதுக்கமும் பிணைக் கடைப்பாடும் | | | | |
| 10,967,693.91 | I. | பெறப்பட்டவை | 6,070,782.72 | | |
| 79,888,486.40 | II. | பெறப்பட வேண்டியவை | 79,978,317.59 | 86,049,100.31 | |
| 5,321,969.97 | III. | பெறப்பட்ட வட்டி | | 1,672,259.40 | 87,721,359.71 |
| 96,178,150.28 | | | | | |
| 57,860.00 | (இ) மூலதன ஒதுக்கம் | | | | 57,860.00 |

03. **மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களும் குறிப்பான ஒதுக்கமும்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 37,087,407.64 | அ. அறக்கொடை நிதியம் | 38,057,070.19 | | |
| 378,624.91 | ஆ. சிறப்பு நன்கொடை | 428,624.91 | | |
| 253,596.78 | இ. ஆராய்ச்சி நன்கொடை | 335,347.90 | | |
| 16,404,831.04 | ஈ. கொடைகளும் நன்கொடைகளும் | 17,644,565.83 | | |
| 2,065,397.64 | உ. துணைவேந்தர் நல நிதியம் | 2,554,875.64 | | |
| 25,620.00 | வளாகத் தலைவர் நிதியம் | 24,820.00 | | |
| 105,528.41 | ஊ. கணனி அபிவிருத்தி ஒதுக்கம் | 105,528.41 | | |
| 727,295.36 | எ. உயிர் இரசாயனவியல் விரிவாக்க கற்கைநெறி நிதியம் | 582,170.36 | | |
| 220,000.00 | ஏ. பதவி நிலை அலுவலருக்கான கணனிக் கல்வி | 220,000.00 | | |
| 6,272,756.59 | ஐ. வெளிநிலைத் தேர்வுகளிலிருந்து வருமானம் | | | |
| | செலவிடப்பட்டது. | 6,127,005.00 | | |
| | செலவிடப்படாதது | 567,130.48 | 6,694,135.48 | |
| 2,436,831.75 | ஒ. ஆங்கில மொழி கற்பித்தல் நிலையம் | | | |
| | செலவிடப்பட்டது. | 90,337.50 | | |
| | செலவிடப்படாதது | 3,095,088.75 | 3,185,426.25 | |
| 50,975.00 | ஓ. முகாமைத்துவபீட அபிவிருத்தி நன்கொடை | | 50,975.00 | |
| 68,101,462.98 | ஔ. பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 69,851,772.75 | 139,735,312.72 |

**சுய நெறியீட்டல் கற்கை நெறிகளின் மீதி**

| | | | | |
|---|---|---|---|---|
| 433,031.31 | I. உடற் கல்வியியல் திப்ளோமா | 704,966.90 | | |
| 384,810.38 | II. மீன் வள அபிவிருத்தி நிலையம் | 595,600.92 | | |
| 544,548.60 | III. பொது நிர்வாகத்தின் பட்டப்பின் திப்ளோமா | 841,053,63 | | |
| 14,421.87 | IV. உயிர் இரசாயனவியல் முதுவிஞ்ஞானமாணி கற்கைநெறி | (49,546.25) | | |
| 1,755,109.00 | V. கல்வி முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் | 2,230,282.00 | | |
| 219,472.09 | VI. ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கை நெறி | 512,026.75 | | |
| 40,961.42 | VII. கணனிப் பிரயோகத்தில் சான்றிதழ் கற்கை நெறி | 70,077.45 | | |
| 1,090,017.75 | VIII. சுகாதார படிப்புகள் அலகு | 160,850.34 | | |
| | IX. ஆங்கிலத்தில் திப்ளோமா | 7,600.00 | | |
| | X. கலாசாரப்படிப்புகளில் முதுகலைமாணி | 572,700.00 | 5,645,611.74 | 145,380,924.46 |

| | | |
|---|---|---|
| 138,612,700.52 | | |
| 11,178,729.19 | **04. மூலதனப் பெறுகைகள்** | 11,178,729.19 |
| 711,551,023.77 | | 699,858,884.23 |

| | 06. **நிலையான சொத்துக்கள்** | கொள்விலைகள் | தேய்மானத்திற்கான ஒதுக்கம் | தேறிய பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| 85,419,738.31 | அ. காணிகளும் கட்டிடங்களும் | 113,359,047.64 | 24,441,255.11 | 88,917,792.53 | |
| 2,539,761.03 | ஆ. ஓரளவு நிரந்தர கட்டிடங்கள் | 7,215,431.56 | 5,036,442.11 | 2,17 8,989.45 | |
| 92,364,617.72 | இ. அலுவலகத் தளபாடமும் சாதனமும் | 255,893,520.64 | 163,367,381.64 | 92,526,139.00 | |
| 26,474,436.59 | ஈ. நூலக நூல்களும் பருவ இதழ்களும் | 105,321,780.81 | 96,128,065.33 | 9,193,715.48 | |
| 404,198.13 | உ. மோட்டார் வாகனங்கள் | 6,858,114.75 | 6,858,113.75 | 1.00 | |
| | ஊ. அங்கிகள் | 1,839,465.50 | 1,839,465.50 | - | |
| 213,367.66 | எ. தொலைபேசி மாற்று | 1,401,972.96 | 1,127,453.68 | 274,519.28 | |
| 1,142,911.67 | ஏ. இயந்திரமும் பொறித் தொகுதியும் | 2,114,610.00 | 1,084,773.33 | 1,029,836.67 | |
| 104,200.00 | ஐ. கால்நடை | 104,200.00 | | 104,200.00 | |
| 208,663,231.11 | | 494,108,143.86 | 299,882,950.45 | 194,225,193.41 | 194,225,193.41 |

| | | | |
|---|---|---|---|
| | **07. முதலீடு** | | |
| 29,907,443.80 | அ. அறக்கொடை நிதிய முதலீடு | 30,617,460.56 | |
| 312,872.00 | ஆ. பிணை வைப்பு | 343,854.00 | |
| 14,924,440.64 | இ. சில்லறை முதலீடு | 9,625,611.72 | |
| 1,717,690.54 | ஈ. துணைவேந்தர் நலநிதிய முதலீடு | 1,717,690.54 | |
| 46,862,446 .98 | | | 42,304,616.82 |
| 144,258,796.53 | **08. நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை** | | 144,258,796.53 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 09. **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| | அ. I. இருப்புப் பொருள் முற்பணம் | | | | |
| 4,949,820.05 | i. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் | 3,887,453.35 | | | |
| 466,970.88 | ii. வவுனியா வளாகம் | 358,557.41 | | 4,246,010.76 | |
| | II. **துறைகளிலுள்ள இருப்புப் பொருள்** | | | | |
| 7,758,434.33 | i. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | | 7,020,459.13 | | |
| 807,036.53 | ii. வவுனியா வளாகம் | | 1,296,832.76 | | |
| 41,795.25 | III. இருப்புப்பொருள் முற்பணக் கணக்கு செயற்பாடு விவசாய பீடம் | | 41,795.25 | | |
| 7,570.00 | IV. ஆங்கில ஆவணங்கள் - வவுனியா வளாகம் | | 7,570.00 | 8,366,657.14 | |
| 79,888,486.40 | ஆ. சில்லறைக் கடன் பெற்றோர் | | | | |
| 2,338,896.40 | I. பிணைக்கடைப்பாடு | | 79,978,317.59 | | |
| | II. ஏனையவை | | 2,356,445.63 | 82,334,763.22 | |
| 32,586,881.07 | இ. பதவியினரின் கடன்களும் முற்பணங்களும் | | 29,599,873.28 | | |
| 76,234.50 | ஈ. மாணவர் கடன்களும் முற்பணங்களும் | | 75,234.50 | | |
| 26,586,078.30 | உ. வழங்கல்களுக்கும் சேவைகளுக்கும் முற்பணம் | | 3,149,995.15 | | |
| 150,666,265.83 | ஊ. கட்டடங்களிற்கான முற்பணம் | | 193,469,950.83 | | |
| 13,456,427.27 | எ. காசுப்புத்தக மீதி | | 12,309,375.35 | | |
| 13,279.50 | ஏ. சிறு காசு முற்பணம் | | 9,746.50 | | |
| 18,371,874.07 | ஐ. இறக்குமதி முற்பணம் | | 4,644,454.56 | | |
| 3,589,288.97 | ஒ. ஏனையவை | | 10,072,031.57 | 253,330,661.74 | 348,278,092.86 |
| 341,605,339.35 | | | | | 729,066,699.62 |
| 741,389,813.97 | | | | | |
| | ***கழி :* நடைமுறைப்பொறுப்புக்கள்** | | | | |
| 2,372,186.60 | அ. வைப்புக்கள் | | 2,765,526.60 | | |
| 2,996,082.90 | ஆ. சில்லறைக் கடன் கொடுத்தோர் | | 5,945,498.24 | | |
| 2,243,547.12 | இ. அட்டுறு செலவுகள் | | 2,397,255.95 | | |
| 1,598,763.18 | ஈ. நிலுவையிலுள்ள வேதனங்கள் | | 1,836,354.05 | | |
| 4,900.00 | உ. இரத்து செய்யப்பட்ட காசோலைகள் | | 14,117.21 | | |
| 20,623,310.40 | ஊ. ஏனையவை | | 16,249,063.34 | | |
| 29,838,790.20 | | | | | 29,207,815.39 |
| 711,551,023.77 | | | | | 699,858,884.23 |

சரியென உறுதி செய்யப்பட்டது.

கையொப்பமிட்டது:
பேராசிரியர் சு. மோகனதாஸ்
கணக்கீட்டு அலுவலர்
துணைவேந்தர்.

கையொப்பமிட்டது:
வெ. காந்தமூர்த்தி
நிதியாளருக்காக.

உப வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2002, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீதான 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2002, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் மற்றும் 111 ஆம் பிரிவுகளுடனும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2003, யூலை 24 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

1.2. கணக்காய்வின் பரப்பெல்லை.-இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் யாவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தவையாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் பரப்பெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினர், மற்றைய வளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய எவ்வளவிற்கு விரிவுபடுத்த முடியுமோ அவ்வளவிற்கு விரிவுபடுத்திக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் குறிப்பிடக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயமாக உத்தரவாதப்படுத்துவற்கு இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கும் வழிமுறைகளுக்கும் வழமைகளுக்கும் அமைவாகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வானது நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்துகைகளையும் ஆதாரப்படுத்தும் சான்றுகளைப் பரிசோதனை செய்வதுடன் கணக்கீட்டுத் தத்துவங்களை மதிப்பீடு செய்தல் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் செய்யப்படும் குறிப்பிடத்தக்க மதிப்பீடு செய்யப்பட்ட தீர்மானங்களும் அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்கள் யாவற்றையும் மதிப்பாய்வு செய்வதுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் முறையானதாக தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பவற்றைத் தீர்மானிப்பதையும் உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் பரப்பெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்குக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

2. **கணக்குகள்**

2.1. ***கணக்குகள் சமர்ப்பித்தல்.***-2002, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் 2003, மாச்சு 31 அன்று அல்லது அதற்கு முன்பு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்த போதும் கணக்குகள் 2003, யூன் 04 அன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் தொடர்பான பட்டோலைகள் 2003, யூலை 24 வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2 ***கணக்காய்வு அபிப்பிராயம்.***-இவ்வறிக்கையின் பந்தி 2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் எழும் செம்மையாக்கங்களின் தாக்கத்தைத் தவிர, 2002, திசெம்பர் 31 இல் உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் விளைவுகளையும் காசோட்டத்தையும் அனைத்துப் பொருண்மையான அம்சங்களையும் நியாயமாக வெளிப்படுத்தக்கூடிய வகையில் நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களாகக் காட்டப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க நிதிக் கூற்றுக்களானவை திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.3 ***நிதிசார் விளைவுகள்.***-சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, 2002, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடு ரூபா 324,974,588 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் மீண்டெழும் செலவுகளுக்கான மானியத் தொகையான ரூபா 250,036.000 இப்பாற்றாக்குறையை ரூபா 74,938,588 ஆகக் குறைவடைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறையான ரூபா 301,292,658 ஆண்டிற்கான மீண்டெழும் செலவிற்காக கிடைக்கப்பெற்ற மானியத் தொகை ரூபா 242,100,000 இப்பற்றாக்குறையை ரூபா 59,192,658 ஆகக் குறைத்திருந்தது.

2.4. ***கணக்குகள் மீதான கருத்துரைகள்***

2.4.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்.- பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன :-

(அ) கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவைக்கமர்த்தப்பட்ட இரு மருத்துவ மாதர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 60,200 ஆயுர்வேதத் திணைக்களத்திடமிருந்து பெறப்படவேண்டிய தொகையாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையிலிருந்து விலகுவதற்கான விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு ஒருமாத கால அறிவித்தல் கொடுக்கப்படாத உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ஒரு மாத காலத்திற்கான சம்பளம் அறவிடப்படாததுடன் 2002, யூன் 11 இல் இருந்து யூன் 30 வரையான காலப்பகுதிக்கான சம்பளமற்ற விடுமுறைக்கான அறவீடு தீர்மானிக்கப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) விடுதிகளில் வதியும் மாணவர்களிடமிருந்து வாடகை அறவிடப்படாததுடன் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல்கலைக்கழகத்தினால் செயற்படுத்தப்படும் வாடிவீடுகளிலும் விடுதிகளிலும் தங்கியிருந்ததற்காக குறிப்பிட்ட சில நபர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய வாடகை தீர்மானிக்கப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) இரசாயனப் பகுதியிலுள்ள ஓர் விரிவுரையாளரிடமிருந்து 8 நாட்கள் சம்பளமற்ற விடுமுறைக்காகப் பெறப்படவேண்டிய ரூபா 11,862 தொகை அறவிடப்படவில்லை.

(ஊ) மருத்துவப் பகுதியில் கையாடப்பட்ட பல மருந்து வகைகள் அறிக்கையிடப்படாததுடன் கணக்குகளில் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) நலன்விரும்பிகளால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பாகச் செலுத்தப்பட்ட பின்வரும் சொத்து விடயங்கள் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை:-

(i) மலேசிய இலங்கைச் சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ரூபா 1,000,000 இல் பெறுமதியான சொத்துக்கள் ;

(ii) தனிப்பட்ட ஒருவரினால் நன்கொடையளிக்கப்பட்ட ரூபா 200,000 பெறுமதியான வீடு மற்றும் சொத்து ;

(iii) ரூபா 400,000 பெறுமதியான திருநெல்வேலியிலுள்ள காணி ;

(ஏ) இராணுவ செயற்பாட்டினால் விவசாய பீடத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் தீர்மானிக்கப்பட்டு கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஐ) யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் முறையே 1975, 1979 மற்றும் 1980 களில் செய்யப்பட்ட வைப்புகள் தொகை ரூபா 43,279 கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) தேவத்துறை கிழக்குப் பகுதி என அழைக்கப்படும் 3 லாச்சம் 14.39 குழிகள் பரப்பளவுள்ள அன்பளிப்பு செய்யப்பட்ட காணியொன்று பெறுமதியிடப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஓ) வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 2,950,267 கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பல்கலைக்கழக சேவையிலிருந்து விலகுவதற்கான விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு மூன்று மாத கால அறிவித்தல் கொடுக்காதவர்களிடமிருந்து மூன்று மாதச் சம்பளம் தீர்மானிக்கப்பட்டு கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஃ) நிலையான சொத்துக்கள் மெய்மை ஆய்வு செய்யப்படாது புத்தகப் பெறுமதியில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(அஅ) வவுனியா வளாகத்திற்கு உரிமையாக்கப்பட்ட பூந்தோட்டத்திலுள்ள முடிக்குரிய காணி 25 ஏக்கரும் பாக்றோட்டில் உள்ள 1/2 ஏக்கரும் பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(அஆ) 2002, சனவரியில் பெறப்பட்ட 2001 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிற்கான மானியம் ரூபா 1,000,000 பிரதான பேரேட்டிற்கு பதியமுன்னர் பொது ஒதுக்கத்தின் ஆரம்ப மீதியில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் கீழ் இக்கொடுக்கல் வாங்கல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அஇ) முழுவதுமாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சில வாகனங்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டு காலத்திற்கான பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(அஈ) முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 23,699 கூட்டு மொத்தச் செலவுத் தொகை மீளாய்வாண்டுக் காலத்தின் செலவாகக் கருதப்பட்டிருந்தது.

(அஉ) வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 519,894 ஆன முற்பணத்தொகை மீளாய்வாண்டிற்கான செலவாகக் கருதப்பட்டிருந்தது.

(அஊ) 1993 இல் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு ரூபா 34.50 வீதம் 220 கோழிகள் வழங்குவதற்காகச் செலுத்தப்பட்ட முற்பணத்தொகையான ரூபா 7,590 ஐ முன்னைய ஆண்டின் செம்மையாக்கங்களின் கீழ் கணக்கிடப்படாது மீளாய்வாண்டுக் காலத்திற்கான செலவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(அஎ) ரூபா 17,849 ஆன செலவுகள் தொகை பிழையாக வகைப்படுத்தப்பட்டு கணக்குகளுக்குச் சாட்டப்பட்டிருந்தன.

(அஏ) வவுனியா வளாகத்தின் முன்னைய ஆண்டு தொடர்பான செலவுகள் தொகையான ரூபா 47,648 மீளாய்வாண்டுக்கான செலவாகக் கொள்ளப்பட்டிருந்தது.

2.4.2 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்:

(அ) முன்னைய ஆண்டில் நாணயக் கடிதங்கள் திறக்கப்பட்ட வழங்கல்களுக்காகச் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையான ரூபா 3,706,683 இல் ரூபா 1,184,834 பெறுமதியான வழங்கல்கள் 2003, யூலை 24 வரை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 இல் ரூபா 136,839 க்கான நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்த போதும் சம்பந்தப்பட்ட வழங்கல் பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் தேசிய பாதுகாப்புக் கட்டணமாக ரூபா 15,662 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கூட்டு மொத்தத் தொகைகளான முறையே ரூபா 259,462,974 மற்றும் ரூபா 17,608,037 சம்பந்தமாக உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

2.4.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.-கணக்குகளிலுள்ள ரூபா 820,403,738 மொத்தத் தொகைக்கான முப்பத்தெட்டு விடயங்களை விபரமான அட்டவணைகள், உருப்படி, சரிபார்த்தல் அறிக்கைகள், மதிப்பீடுகள், அளவீட்டுத் தாள்கள், விமான பயணச் சீட்டுக்கள், விலைக் கோரிக்கைகள், வாகன ஓட்டக் குறிப்புகள், பொருட் பதிவேட்டுச் சான்றிதழ்கள் என்பன இன்மையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியாதுள்ளது.

2.4.4 வெளிப்படையான மோசடியான கொடுக்கல், வாங்கல்கள்.-வங்கியிலிடப்பட்ட காசு வைப்புத் தொகையான ரூபா 2,675, 2003 யூலை 24 வரை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

2.4.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை.- பின்வரும் அதிகாரச் சட்டங்கள், நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவைகள், சுற்றறிக்கைகள் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன:-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தாபன விதிக் கோவை.- அத்தியாயம் III இன் 30 ஆம் பிரிவு, அத்தியாயம் V 7.6 இல் இருந்து 7.6.2 வரையான பிரிவுகள், அத்தியாயம் XVII இன் 5.2 மற்றும் 9.1 ஆம் பிரிவுகள், அத்தியாயம் XX இன் 5.2, 9.1 மற்றும் 3.1 ஆம் பிரிவுகள், அத்தியாயம் XXV இன் 2.2 (எவ்) ஆம் பிரிவு மற்றும் அத்தியாயம் XXVII இன் 9.4 ஆம் பிரிவு.

(ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம்.- 71 (1) மற்றும் 71(2) ஆம் பிரிவுகள்.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள்

(i) 1980, பெப்புருவரியின் 63 ஆம் இலக்கத்தின் 6(3) ஆம் பிரிவு ;

(ii) 1975 மாச்சிவின் 47 ஆம் இலக்க நிதி மற்றும் வழங்கல்கள் சுற்றறிக்கை ;

(iii) 2002, யூன் 12 இன் 2002/07 ஆம் இலக்கச் சுற்றறிக்கை.

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்.- 1978, திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க, 1979, யூலை 29 இன் 828 ஆம் இலக்க மற்றும் 1990, பெப்புருவரி 08 இன் 47 ஆம் இலக்க சுற்றறிக்கைகள்.

(உ) நிதிப் பிரமாணங்கள்.- இல. 264(1), 570, 571, 700(5), 754 மற்றும் 880.

### 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 **நிதிசார் விளைவுகள்.**-மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடு சென்ற ஆண்டின் பற்றாக்குறையான ரூபா 59,192,658 உடன் ஒப்பிடும் போது ரூபா 74,938,588 பற்றாக்குறையை விளைத்திருந்தது. இது ரூபா 15,746,658 ஆல் பற்றாக்குறை அதிகரித்திருப்பதைக் காட்டுகின்றது.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.-**

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபையின் பண்டசாலையிலிருந்து சரக்குகளை அகற்றுவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்காக பல்கலைக்கழக ரூபா 9,554 ஐ காலதாமதக் கட்டணமாகச் செலுத்தியிருந்தது.

(ஆ) கொழும்பு களஞ்சியசாலைக்கு ரூபா 153,450 கிரயமுள்ள நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரமொன்று இக்கூறுக்கு நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரத்தின் தேவையைக் கருத்திற்கொள்ளாது வழங்கப்பட்டிருந்தது;

(இ) ஐந்து வருடகாலத்திற்கு மேலாக ரூபா 218,445 இல் மதிப்பிடப்பட்ட போதியளவு இருப்பு களஞ்சியத்தில் இருந்த போதும் 2002, மாச்சு 26 அன்று ரூபா 9,000 க்கு ஸ்பிரல் பைண்டிங் ஸ்பிறிங் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) குறைந்த செலவில் வீதிப் போக்குவரத்து வசதி இருந்த போதும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் திரும்பிச் செல்வதற்கும் மீளாய்வாண்டுக் காலத்தில் ரூபா 152,423 கிரயத்தில் நான்கு பல்கலைக்கழக சபை அங்கத்தவர்களும் பதினேழு பதவியினர் அங்கத்தவர்களும் விமானப் பயணத்திற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

3.3 ***மெதுவாக அசையும் பாவிக்கப்படாத மற்றும் குறைவாகப் பாவிக்கப்படும் ஏனைய சொத்துக்கள்:-***

(அ) கிளிநொச்சியிலுள்ள மக்கள் வங்கியிலும் இலங்கை வங்கியிலும் உள்ள இரண்டு நடைமுறைக் கணக்குகளில் இருந்த முறையே ரூபா 16,710 உம், ரூபா 28,067 உம். இக்கணக்குகள் 1990 இல் இருந்து செயற்படுத்தப்படாதபடியினால் பாவிக்கப்படாதிருந்தன.

(ஆ) ரூபா 10,467 பெறுமதியான எட்டு வகையான மருந்துகள் ஒரு வருடத்திலிருந்து இரண்டு வருடங்கள் காலமாக அவற்றின் பாவனைக்காலம் முடியும் முன் பாவிக்கப்படாது சுகாதார நிலையத்தில் இருந்தன.

(இ) நீண்டகாலமாகத் திருத்தப்படாது 17 மொனிட்டர்கள் 15 சீபீயூ 01 மைக்றோ நெற்வேக்கப் 01 ஸ்கானர் 01 பிறின்டர் மற்றும் 01 சேவர் என்பன திருத்தப்படாது கொம்பியூட்டர் கூறில் இருந்தன. அவற்றைத் திருத்திப் பாவிப்பதற்கோ அல்லது கைத்தவிர்ப்பதற்கோ நடவடிக்கையேதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2002 ஆம் ஆண்டில் ரூபா 170,000 க்கும் ரூபா 12,400 க்கும் கொள்வனவு செய்யப்பட்ட முறையே ஐந்து நேரப் பதிவு இயந்திரங்களும் இவ்வியந்திரங்களுக்கான காகிதாதிகளும், குறித்த நோக்கத்திற்காகப் பாவிக்கப்படாது பல்கலைக்கழகத்தின் தாபனக் கூறில் பாவிக்கப்படாது வைக்கப்பட்டிருந்தன.

(உ) ரூபா 28,793 பெறுமதியான 1053 வெண்கட்டிப் பெட்டிகள் நீண்ட காலமாகக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) 2000, ஓகத்து மாதத்தில் ரூபா 18,415 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 116 நிபன் வேட்புறொசெச்சர் 2003, யூலை 24 வரை பாவிக்கப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

(எ) திருத்தங்கள் செய்யாத காரணத்தினால் நிறுவைத் தராசு ஒன்று பரசிற்ரோலோஜிப் பகுதியில் ஐந்து வருட காலத்திற்கு மேலாகப் பாவிக்கப்படாதிருந்தது.

(ஏ) திருத்தங்கள் மேற்கொள்ளப்படாது ஆய்வுகூட உபகரணங்களான எலெக்றோ காடியோகிறாவ் தராசு, சயிக்கில், ஓடியோ மீற்றர் மற்றும் சீஓ 2 அனலைசர் என்பன ஒரு வருடத்திலிருந்து இரண்டு வருடங்களாகப் பாவிக்கப்படாது பௌதீகப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தன.

(ஐ) திருத்தங்கள் மேற்கொள்ளப்படாது ரூபா 1,027,000 இல் பெறுமதியான 11 ஆய்வுக்கூட உபகரணங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக இரசாயன பகுதியில் பாவிக்கப்படாதிருந்தன.

3.4 **இனங்காணப்பட்ட நட்டங்கள்.-**

(அ) ரூபா 4,500 கிரயமுடைய 10 சீமெந்து மூடைகள் பாவிப்பதற்கு உகந்ததல்லாத நிலையில் களஞ்சியத்தில் இருந்தன.

(ஆ) ரூபா 8.505 கிரயமுடைய ஆர்ஜே 45 கொனெக்டருக்கான கிறிம் ரூல் 2 காணாமல் போயிருந்தன.

3.5 செயற்திட்டங்களில் காலதாமதம்.-

(அ) 1981 காலப்பகுதியிலும் அதற்குப் பின்பும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பல செயற்றிட்டங்களின் கீழான நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ பிடத்திலுள்ள கேட்போர் கூடத்தை அலங்கரிப்பதற்காக 2002 யூலையில் கம்பனியொன்றிற்கு ஆலோசனைக் கட்டணமாக ரூபா 126,973 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கேட்போர் கூடத்திற்கான அலங்கரிப்பு வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.6 ***முறையாகப் பராமரிக்கப்படாத சொத்துக்கள்.-***

பல்கலைக்கழகத்தின் காணி, கட்டிடங்களைப் பராமரிப்பதற்காக ரூபா 6,803,452 செலவிடப்பட்டிருந்த போதும், பல்கலைக்கழகத்திலுள்ள சுகாதார நிலையம் முறையாகப் பேணப்படாததுடன், சுகாதார நிலையம் திறமையாகவும் தாக்கமாகவும் செயற்படுத்துவதற்கேற்ற வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

3.7 ***பிரத்தியேகமான செலவு விடயங்கள்.-***

(அ) 2002, திசெம்பர் 13 இல் ஸ்ரீ பரமேஸ்வரன் கோவிலில் நடாத்தப்பட்ட சேர் பொன்னம்பலம் இராமநாதன் குருபூசை தொடர்பாக செலவு செய்யப்பட்ட ரூபா 10,000 ஏனைய மீண்டுவரும் செலவாகக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மருத்துவபீட மாணவர் ஒருவரின் ஈமச் சடங்கிற்காக ரூபா 39,500 செலவு செய்யப்பட்டிருந்தது.

3.8 **பதவியணியினர் ஆட்சேர்ப்பு**.-

(அ) பதவி வெற்றிடங்களுக்காக அமைச்சரவையினதும் திறைசேரியினதும் அனுமதி பெறப்படாது வெற்றிடப் பதவிகளுக்கு வேலை ஒதுக்கீட்டு அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்வது பல்கலைக்கழகத்தின் வழமையான அம்சமாக இருந்தது. பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஏழு கல்விசாரா பதவியினர் உட்பட பதின்மூன்று ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் திறைசேரியினதும் அமைச்சரவையினதும் அனுமதியின்றி வேலை ஒதுக்கீட்டு அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,346,571 வேதனமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரியினதும் அமைச்சரவையினதும் அனுமதி பெறப்படாது யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு பல்கலைக்கழகத்திற்காக வழங்கிய விரிவுரைகளுக்கும் பயிற்சிகளுக்கும் சன்மானமாக மாதாந்தச் சம்பளத்திற்கு சமானமான தொகை அவர்கள் ஒரு நாளைக்கு சேவையாற்றிய கால அளவைக் கருத்தில் கொள்ளாது நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, வைத்தியர்கள் இரு நிறுவனங்களிலிருந்து சம்பளம் பெறுகின்றார்கள்.

3.9 ***குறிப்பிட்ட நோக்க நிதிகளின் பயன்பாடு***.-

குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட மானியங்களான ரூபா 20,482,979 தொகையும் அதன் வட்டித் தொகையாகிய ரூபா 2,391,830 உம் வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.10. ***ஊழியர் பணிக்கொடைக கொடுப்பனவிற்கான நிதி வழங்கல் ஒழுங்குகள்***.-

மீளாய்வாண்டுக் கால முடிவில் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடைகள் கொடுப்பனவிற்காக ரூபா 69,851,773 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அவ்வப்போது ஏற்படும் பொது வைப்புக்களை எதிர்கொள்ளுமுகமாக நிதியமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

3.11 ***பாதீட்டுக் கட்டுப்பாடு***.-

பாதீட்டுக்கும் உண்மையானவற்றிற்குமிடையே அவதானிக்கப்பட்ட பாரிய வேறுபாடுகள் பாதீடு தாக்கமுள்ள முகாமையின் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பாவிக்கப்பட்டிருக்காமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்:** கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) இன் பிரகாரம் எனது விரிவான அறிக்கையொன்றின் மூலம் 2003, யூலை 24 அன்று பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் சம்பந்தமாக விசேட கவனம் தேவைப்படுகின்றது. :-

(i) பதவியினர் ஆட்சேர்ப்பு
(ii) நிலையான சொத்துக்கள்
(iii) கடன்பட்டோர்
(iv) முற்பணங்கள்
(v) கொள்வனவுகள்
(vi) நட்டங்கள்
(vii) பாதீடு
(viii) ஒப்பந்த நிர்வாகம்
(ix) களஞ்சியம்
(x) நன்கொடை நிதியம்
(xi) உள்ளகக் கணக்காய்வு

எஸ். சீ. மாயாதுன்னே,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பு**

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2002, திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவுற்ற ஆண்டிற்கான கணக்குகள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1), மற்றும் iii ஆம் பிரிவுகளுடனும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம் மற்றும் 7 ஆம் உபபிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.*

*இக்கணக்குகள் தொடர்பான எனது அவதானிப்புரைகள் பல்கலைக்கழகத்தின் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருககு என்னால் அனுப்பப்பட்ட சம திகதி கொண்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.*

*(எஸ். சீ. மாயாதுன்னே),*
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி,*

*கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்,*
*கொழும்பு 07.*
*2003, ஓகத்து 21.*

**2002.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மீது யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆளுநர் சபையின் அவதானிப்புகள்**

2.4.1. (அ) ரூபா 60,200.12 தொகை 2002 ஆம் ஆண்டு கணக்கிற்குரிய அட்டவணையில் சேர்க்கப்பட்டு கடன்பட்டோர் ஆகவும் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) பல்கலைக்கழக சேமலாபநிதிய மீளளிப்புக்கான ஆவணங்கள் தயார் செய்யும் பொழுது சகல வருமதிகளும் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

(இ) மாணவர்களால் செலுத்தப்பட்ட வாடகைப் பணம் கணக்கில் காட்டப்படுவதுடன் அறவிடப்படவேண்டிய தொகையும் கணக்கில் வருமதியாக காட்டப்படுகிறது.

(ஈ) விருந்தினர் விடுதியிலும்உத்தியோகத்தர் தங்கும் இல்லத்திலும் தங்கி இருப்போரிடமிருந்து அறவிடப்பட்ட வாடகை கணக்கில் காட்டப்பட்டுள்ளதுடன் வரவேண்டியவை வருமதியாகவும் கணக்கில் காட்டப்படுகின்றன.

(உ) 2003 ஆம் ஆண்டில் இத்தொகை அறவிடப்பட்டுள்ளது.

(ஊ) இவ்விடயம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

